2023

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
வருடாந்த செயற்றிறன் அறிக்கை
Annual Performance Report

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023

அரசாங்க தகவல் திணைக்களம்

இல 163,
கிருலபன மாவத்த,
கொழும்பு 05.

2023 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

அரசாங்க தகவல் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம்: 210

2020.01.30 ஆம் திகதிய அரச நிதித் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

	முன்னுரை	பக்கம்
அத்தியாயம் 01-	நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் பொழிப்பு	169 - 180
அத்தியாயம் 02-	முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு	181 - 188
அத்தியாயம் 03 -	ஆண்டுக்கான முழுமையான நிதிச் செயலாற்றுகை	189 - 215
அத்தியாயம் 04 -	செயலாற்றுகைச் சுட்டி	217 - 221
அத்தியாயம் 05 -	நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	223 - 226
அத்தியாயம் 06-	மனித வளக் கூறுகள்	227 - 231
அத்தியாயம் 07 -	இணக்க அறிக்கை	233 - 249
	முடிவு	250 – 252

01 ஆம் அத்தியாயம

நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் பொறிப்பு

நிறுவனக் கூறுகள்/அமுல்படுத்தல் பொழிப்பு

1.1. அறிமுகம்

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

1.3. பிரதான பணிகள்

1.4. நிறுவனக் கட்டமைப்பு குறிப்பு

1.5. திணைக்களத்தின் பிரிவுகள்/அலகுகள்

1.6. திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்/நிதியம்

1.7. வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கின்ற திட்டங்கள் தொடர்பான தகவல்கள் (இருப்பின்)

அ) கருத்திட்டம்

ஆ) பங்களிக்கின்ற முகவர் நிறுவனம்

இ) கருத்திட்ட மதிப்பீட்டு செலவு - ரூ.மி

ஈ) கருத்திட்டக் காலப்பகுதி

1.0 அரசாங்க தகவல் திணைக்களம்

1.1. அறிமுகம்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது ஏற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்த காலப்பகுதியில் யுத்தம் தொடர்பான தகவல்களை மக்கள் மத்தியில் பரிமாறிக் கொள்வதற்காக "War Information Centre" எனும் பெயரில் செயற்பட்டது.

உலக மகா யுத்தம் முடிவுற்றதன் பின்னர், குறித்த தகவல் மத்திய நிலையம், அரசாங்க அபிவிருத்தி தகவல்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்காக "அரசாங்க தகவல் திணைக்களம்" எனும் பெயரில் 1948 யூலை மாதம் 31 ஆம் திகதி சோல்பரி ஆணைக்குழுவின் ஆலோசனை மற்றும் விதந்துரைகளுக்கமைய கொழும்பு காலிமுகத்திடல் செயலகக் கட்டிடத் தொகுதியில் முதல் தடவையாக அரசாங்க தகவல் திணைக்களம் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் அரச தகவல் திணைக்களம்,

1. செய்தி வழங்கல் பிரிவு
2. அரசாங்க புத்தகங்கள் நிறுவனம் மற்றும்
3. அரசாங்க திரைப்படப் பிரிவு

ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டமைந்தது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்தி பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான மூன்று பிரதான பணிகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் முக்கிய பணிகளாக,

1. அரசின் அபிவிருத்தி தொடர்பான செய்திகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
2. அரசின் உத்தியோகபூர்வ வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்லல். (அச்சிடல் மற்றும் விநியோகம்)
3. அரசால் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக கிராமமட்ட மக்களை தெளிவூட்டுவதற்காக அரசாங்க திரைப்படப் பிரிவின் மூலம் விவரணத் திரைப்படங்களைத் தயாரித்துக் காண்பித்தல்.

காலிமுகத்திடல் செயலக கட்டிடத்திலிருந்து நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் காலத்துக்கு காலம் ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்தன. அவற்றில் ஜாவத்த நீர்ப்பாசன திணைக்களக் கட்டிடம், மொரட்டுவ வெலோனா கட்டிடம், கோட்டை ட்ரான்ஸ்வரக்கர் மாளிகை, ஸ்ரீமத் பாரென் ஜயத்திலக்க மாவத்தையிலுள்ள அத்தபத்து கட்டிடம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 1990 ஆண் ஆண்டு காலப்பகுதியில் கொள்ளுப்பிட்டி தனியார் கட்டிடத்தில் இரண்டு மாடிகளில் இயங்கிய திணைக்களம், பின்னர் அரச திரைப்படப் பிரிவு இயங்கிய பொல்ஹேன்கொட வளாகத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அன்று தொடக்கம் குறித்த வளாகத்தில் புதிய

கட்டிடத்தை நிர்மாணித்து நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஒரே வளாகத்துக்கு கொண்டுவருவதற்கு நிறுவன தலைவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அதன் பெறுபேறாக சிறந்த சேவை வழங்கலுக்காக ஆளணியினருக்கு வழங்கப்பட்ட பரிசாகக் குறித்த வளாகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஐந்து மாடிகளை கொண்ட புதிய ஊடக அபிவிருத்தி நிலையம் 2012 மார்ச் 30 ஆம் திகதி சுப வேளையில் திறந்து வைக்கப்பட்டது.

சமகால அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமாக நிறுவன தலைவரின் பதவி தரமுயர்த்தப்பட்ட போதிலும், ஆரம்பத்தில் இப்பதவி தகவல் அத்தியட்சகர் என அழைக்கப்பட்டது. 1948 ஆரம்ப தகவல் அத்தியட்சகராக திரு. பி.நடேசன் அவர்கள் கடமையாற்றியதுடன், குறித்த தகவல் அத்தியட்சகர் பதவி தகவல் பணிப்பாளராகவும் பின்னர் தகவல் பணிப்பாளர் நாயகமாக நிறுவனப் பிரதானியின் பதவி தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமும், பாண்டித்தியமும் பெற்ற ஊடகவியலாளரும், பத்திரிகை ஆசிரியருமான எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல அவர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிராதன தகவல் அலுவலராக நியமிக்கப்பட்டார். அத்துடன், உதவி தகவல் அலுவலர்களாக பி.என். மெத்தேகொட, எல்.ஆர்.குணதிலக, எஸ்.பி. வெத்தசிங்க, பி.பீ. விஜேசிங்க ஆகியோர் பணியாற்றியுள்ளார்கள்.

அப்போதைய இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்த சிரேட்ட அமைச்சர் கலாநிதி. சரத் அமுனுகம அவர்களின் எண்ணக்கருவுக்கமைய 1978 பெப்ரவரி 4 ஆம் திகதி தகவல் திணைக்களத்தின் முதன்மை வெளியீடான “தெசத்திய” சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியிடப்பட்டதுடன், இலங்கையின் வெகுசன ஊடகத்துறையின் முக்கிய திருப்புமுனையாகவும் அமைந்ததுடன், நீண்டகாலமாக தீர்மானம்மிக்க திருப்புமுனைகளைக் கடந்து தொடர்ச்சியாக மக்கள் மனதை ஊட்டமளித்து வருகின்ற அச்சு ஊடகமாகவும் அமைகின்றது.

தெசத்திய சஞ்சிகையினால் பெருமளவு எழுத்தாளர்கள் ஊட்டம் பெற்றார்கள். பெருமளவு வாசகர் தலைமுறைகளும் உள்ளனர். எமது நாட்டின் கொள்கை வகுப்புக்களை மேற்கொள்வோர் தொடக்கம் விவசாயிகள், தொழிலாளிகள் வரை அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்து இலங்கை அரச துறையால் வெளியிடப்பட்ட ஒரேயொரு தகவல் சஞ்சிகையாகவும் “சக்வல” அமைந்தது. குறிப்பாக அரசின் கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் முதன்மைப் பொறுப்பை தோளில் சுமந்த தெசத்திய சஞ்சினை அதனைக் கடந்து சென்று மக்களின் புலமைசார் புரட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கொண்டது. சமூக, பொருளாதார, கலாச்சார, கலை, சர்வதேச மற்றும் பல துறைகள் தொடர்பான தகவல்களை மிகவும் எளிமையான மொழிநடையில் வாசகர்களின் இரசனையை அதிகரிக்கும் வகையில் முன்வைப்பதில் தெசத்திய வெற்றி பெற்றது.

தெசத்திய சஞ்சிகைக்கு மேலதிகமாக “தகவல்” எனும் பெயரிலான வாரப் பத்திரிகையும், “Alliance” எனும் பெயரிலான ஆங்கில பத்திரிகையும் அக்காலத்தில் வெளியிடப்பட்டது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 220 பேராவதுடன், அதற்கு மேலதிகமாக தேசிய ஊடக நிலையத்தில் பணிபுரிகின்ற 40 அலுவல்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களைப் பெற்றுக்கொண்ட 70 பேரும் கடமையாற்றுகின்றனர். அதற்கமைய 2022.12.31 இல் மொத்தப் பணியாட்தொகுதி 330 பேராக உள்ளனர்.

நேரடியாகப் பொது மக்களுக்கு செய்திகளை வழங்கும் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் நிறுவனமாகையால், அரச நிறுவனங்களில் தகவல் திணைக்களம் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகத் திகழ்கின்றது. அரசாங்க தகவல் திணைக்களத்தால் வெளியிடப்படும் அறிவித்தல்கள் அனைத்தும் உண்மைத் தகவல்களை உள்ளடக்கியவையாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு செய்திகளை வழங்குவதுடன், காலத்திற்குக் காலம் அரசாங்கங்கள் எடுக்கின்ற தீர்மானங்களுக்கமைய, செயற்படுவதற்கு நேரிட்டுள்ளது. 1979, 1980, 1981, 1983, 1987, 1995, 1996 மற்றும் 2000 ஆண்டுகளில் அரசாங்கம் செய்திகளைத் தணிக்கை செய்துள்ளதுடன், அச்சந்தர்ப்பங்களில் நாட்டில் குழப்பகரமான சூழ்நிலைகள் நிலவியமையே அதற்குக் காரணமாக அமைகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் செய்தித் தணிக்கைகளை மேற்கொள்வதற்கான தகுதிவாய்ந்த அதிகாரியாக தகவல் பணிப்பாளருக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1993 ஆண்டில் அரசுசாரா தொலைக்காட்சி அலைவரிசைகள் முதல் தடவையாக செய்திகளை ஒளிபரப்புவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியமையை எமது நாட்டின் ஊடக வரலாற்றில் முக்கிய சம்பவமாகக் கருதலாம். அதற்கு இணையாக பொது மக்களுக்கு தேவையான தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக 1995 மே 18 ஆம் திகதி தேசிய தகவல் நிலையத்தை உருவாக்கியமையும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேலுமொரு முற்போக்கான நடவடிக்கையாக அமைந்தது. அந்நிலையம் கொழும்பு கோட்டை, ட்ரான்ஸ்வேக்கர்ஸ் மாளிகையில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் ஊடகவியலாளர்களுடன் நல்லுறவை மேம்படுத்துவதற்காக “Press Club” தாபிக்கப்பட்டது.

திணைக்களம் திடீரென ட்ரான்ஸ்வேர்க்கர்ஸ் மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், கொள்ளுப்பிட்டியில் இருமாடி தனியார் கட்டிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அரசாங்க வெகுசன ஊடகக் கட்டமைப்பில் நிலவிய மட்டுப்பாடுகளை அடையாளம் கண்டு, மேலும் அபிவிருத்திப் பணிகளில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், குறிப்பாக அரசின் கமத்தொழில், புத்தாக்கம், ஜனநாயகத்தை பலப்படுத்துதல், சர்வஜன வாக்குரிமையில் மக்களின் பணிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் போது, அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அரச திரைப்படப் பிரிவு, வெளியீட்டுப் பணியகம் போன்றவற்றால் மிகப் பரந்தளவிலான பணிகள் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்ப காலம் தொடக்கம் அரச பிரச்சார செயற்திட்டத்தை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நிறைவேற்றிய அரசாங்க தகவல் திணைக்களம், இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களை இலக்காக கொண்டு துண்டுப்பிரசுரங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த காலப்பகுதியில் வெளிநாட்டுத் தூதரகங்களை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்ட "Week Happening in the Island" சஞ்சிகை, "Introduction Ceylon" போன்ற வெளியீடுகள் மூலம் இலங்கை தொடர்பான விசேட தகவல்கள் வெளிநாடுகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இலங்கை தொடர்பான தகவல்களை வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்காக "Sri Lanka Today" எனும் பெயரிலான மும்மாத சஞ்சிகை வெளியிடப்பட்டது.

அரச வெளியீட்டு பணியகமும் மிகவும் பரந்த குறிக்கோளுடன் இயங்கி அரசாங்கத்தின் சட்டங்கள் தொடர்பான உத்தியோகபூர்வ வெளியீடுகளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அச்சிட்டு வெளியிட்டு வருகிறது. அதன் ஆரம்ப அலுவலராக திரு.R.V.H.Vantwest அவர்கள் பணியாற்றியுள்ளார்.

யூலியோ பெற்ரோனி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரச திரைப்படப் பிரிவு, சுதந்திரத்தின் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்ட தேசிய அபிவிருத்தி பற்றி பொது மக்களை தெளிவுபடுத்துவதற்காக விவரணத் திரைப்பட தயாரிப்பு மூலம் பெரும் பணியாற்றியுள்ளது. பிற்காலத்தில் பல புகழ்பெற்ற விவரணத் திரைப்பட இயக்குநர்களை உருவாக்கிய இந்த பிரிவு, பாரிஸ் சர்வதேச திரைப்பட விழா போன்ற வெளிநாட்டு திரைப்பட விருது விழாக்கள் பலவற்றில் ஆவணமாக்கல், பகுதியளவில் ஆவணமாக்கல் பிரிவில் இலங்கைக்கு விருது பெற்று கொடுத்துள்ளது.

1948 ஆண்டு சுதந்திரம் பெற்றவுடன் உருவாக்கப்பட்ட திணைக்கள மாதிரிக்கமைய பயணிக்கக்கூடிய உச்சம் வரை பயணிக்கும், தனது பயணப் பாதையில் அன்றைய நாளை விடவும் பிந்திய ஆண்டுகளில் நவீன உலகத்துக்கு பொருத்தமான வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள அரசாங்க தகவல் திணைக்களம் 2022 ஆண்டளவில் பல பிரிவுகளில் தனது சேவைகளை மேற்கொண்டு வருகிறது. அரச திரைப்பட பிரிவு, நிழற்பட பிரிவு, அரச சமூக ஊடகப் பிரிவு, தெசத்திய சஞ்சிகை பிரிவு, புதிய ஊடகப் அலகு (www.news.lk), அரச வெளியீட்டுப் பிரிவு, ஊடக அடையாள அட்டைப் பிரிவு, பிரச்சார பிரிவு, ஊடகப் புலனாய்வு மற்றும் வெகுச ஊடக ஆய்வுப் பிரிவு, வெளிநாட்டு செய்தி அலகு, பாடசாலை ஊடகக் கழகங்கள் அபிவிருத்தி அலகு ஆகியவற்றை உள்ளடக்கி அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.

இப்பணிகள் சமகால மாற்றங்களுக்குட்பட்டு தற்போது வரை வெற்றிகரமாக செயற்படுவதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் இயங்கி வருவதுடன், தற்போதுள்ள பொறிமுறை மூலம் அதற்கான அவகாசமும் கிடைத்துள்ளதும் அவதானிப்பின் போது தெளிவாகிறது.

❖ அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் தலைவர்கள்

1948 ஆண்டிலிருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் பிரதானிகளாக தகவல் அத்தியட்சகர், தகவல் பணிப்பாளர் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகம் ஆகிய பெயர்களில் பதவி வகித்து பின்வரும் அதிகாரிகள் செயற்பட்டுள்ளார்கள்.

1948 - திரு. பி. நடேசன்
1949 - திரு. டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல
1950 - ரி.ரி.ஆர். விவியன் ஹொரயின்
1952 - டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல
1955 - திரு. நடேசன் பரராஜசிங்கம்
1956 - திரு. லயனல் பெரேரா
1957 - திரு. ஜீ.டப்.ஏ.எம். பெரேரா
1958 - திரு. ஜேம்ஸ் பெரேரா
1959 - திரு. ரி.எம். ஜயரத்தினம்
1960 - திரு. திலக் எரங்க குணரத்ன
1961 - திரு. டப்.எல் பெர்ணான்டோ
1962 - திரு. எஸ்.பி. சேனநாயக்க
1966 - திரு. டி. அலுவிஹாரே
1967 - திரு. பி.என். மெத்தெஹொட
1968 - கலாநிதி. எஸ்.எல்.பி. அமுணுகம
1972 - திரு. பி.எம். பிரேமவர்த்தன
1974 - திரு. டப்.ஆர்.ஜீ. திலகரத்ன
1977 - எஸ். அனுர குணசேகர
1983 - திருமதி. மானெல் அபேரத்ன
1990 - திரு. கே.எஸ். விமலசேன
1991 - திரு. கே.ஆர். எல். விஜேவர்த்தன
1992 - பேராசிரியர். சுனந்த மத்தும பண்டார
1994 - திரு. ஆரிய ரூபசிங்ஹ
2003 - திரு. கே.ஏ.பீ.ஜே.பி. ஜயசேகர
2004 - திரு. டப்.எம். பியசேன
2005 - திருமதி. காந்தி விஜேதுங்க
திரு. எஸ்.டீ. பியதாஸ
2006 - திரு. ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

❖ **தகவல் பணிப்பாளர் நாயகம் பதவியில்**

2009.02.01 தொடக்கம் 2010.05.06 வரை – திரு. ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

2010.05.07 தொடக்கம் 2015.01.08 வரை – பேராசிரியர். ஆரியரத்ன அத்துகல

2015.01.13 தொடக்கம் 2015.05.07 (பதில்) – திருமதி. கே.டப்.ரி.என். அமரதுங்க

2015.05.08 தொடக்கம் 2016.06.02 வரை – கலாநிதி. தர்ஷனி குணதிலக்க

2016.06.06 தொடக்கம் 2017.09.29 வரை – கலாநிதி. ரங்க கலன்சூரிய

2017.10.13 தொடக்கம் 2018.10.26 வரை – சட்டத்தரணி. சுதர்ஷன குணவர்த்தன

2018.10.27 தொடக்கம் 2021.04.07 வரை – திரு. கே.எம்..ஜீ.எஸ்.நாலக்க களுவெவ

2021.04.19 தொடக்கம் 2022.09.07 வரை – திரு. மொஹான் சமரநாயக்க

2022.09.08 தொடக்கம் இதுவரை – திரு. தினித் சிந்தக கருணாரத்ன

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

❖ தூரநோக்கு

"பொறுப்புமிக்கதும் சுயாதீனதுமான ஊடக கலாசாரத்தினைப் பேணுதல்"

❖ பணிக்கூற்று

"இலங்கையிலுள்ள ஊடக சுற்றுச்சூழலில் பரஸ்பரம் மிக்க தொடர்பாடலை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்தல். அரசாங்கத்தின் தூரநோக்கை செயற்படுத்தல் சரியான தகவல்களை வழங்குதல் பொதுமக்களின் உரிமைகளை தீர்மானிப்பதற்கான தகுந்த சந்தர்ப்பத்தினை வழங்குதல்"

❖ நோக்கங்கள்

- அரசாங்கத்தின் பொருளாதார – சமூக நோக்கு, திட்டமில் மற்றும் தேசிய அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்துதல்.
- உயரிய ஊடக கலாசாரத்தை உருவாக்குதல்.
- முக்கியமான சமகால சம்பவங்கள், அரச தகவல்கள் மற்றும் செயற்பாடுகள், செவிப்புல – கட்புல மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்தி சமூக மயப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.
- வெகுசன ஊடகத்துறைக்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துதல்.
- ஊடகவிலாளர்களுக்கான பயிற்சி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களது நலன்களுக்காக முன்னின்று செயற்படுதல்.

1.3. பிரதான செயற்பாடுகள்

உயரிய அபிவிருத்தி மட்டத்தையும், நிலைபெறுதகு இலக்குகளை அடைவதற்காக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களை இணைத்துக் கொண்டு தொடர்பாடலில் பங்களிப்புச் செய்வதே திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களாக அமையும்.

- அமைச்சின் தகவல்களை வெகுசன ஊடகங்களுக்கு வெளியிடல்
- அரசின் அபிவிருத்திச் செயன்முறைகள் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டல்
- தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் மற்றும் அவசர நிலைமைகள் தொடர்பாக தெளிவூட்டல்.
- அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக திரைப்படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகள் மூலம் மக்களைத் தெளிவூட்டல்
- அரசின் அபிவிருத்தி தொடர்பான தகவல்கள், வரலாற்றுத் தகவல்கள் மற்றும் ஏனைய காலத்திற்கேற்ப முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள் தொடர்பான செய்திகள் மற்றும் விவரணக் காணொளிகள் திரைப்படங்கள் தயாரித்தல்
- ஆய்வு ரீதியான விவரணத் திரைப்படங்களைத் தயாரித்தல்
- வெளிவிவகார அமைச்சின் ஊடாக உள்நாட்டு தகவல்களை வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டுத் தகவல்களை எமது நாட்டு மக்களுக்கும் வழங்கல்.
- அரச சமூக ஊடகப் பிரிவு மற்றும் News.lk இணையத்தளத்தை மும்மொழிகளிலும் பேணிச் செல்லல்.
- தெசத்திய சஞ்சிகை, அரச நிருபங்கள் மற்றும் நுண்ணாய்வு சஞ்சிகைகளை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லல்.
- அரச வெளியீட்டுப் பணியகத்தை வினைத்திறனுடன் பேணிச் செல்லல். (07 மாவட்ட வெளியீட்டுக் கருமபீடங்கள் உள்ளடங்கலாக)
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் தேசிய நடவடிக்கைகள் மற்றும் இராஜதந்திர வைபவங்களுக்கான ஒருங்கிணைப்புக்கள்
- பிராந்திய அபிவிருத்திப் பணிகள் மற்றும் அமைச்சுக்களின் புதிய வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லல் மற்றும் ஊடகக் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தல்
- தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வைபவங்களில் பிரதான ஊடக இணைப்பாளராக செயலாற்றுதல்
- தொழில்வாண்மை ரீதியான பிராந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையை வழங்குதல்
- நிரல் அமைச்சின் ஊடக அலகுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புக்களை பேணிச் செல்லல்.
- தேசிய ரீதியாகவும் சமகாலத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததுமான சம்பவங்களுக்குரிய நூல்களை வெளியிடல் (ADB மற்றும் UNDP போன்ற நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்.)
- ஜனாதிபதி அவர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயங்களின் போது ஊடக அறிக்கைப்படுத்தல்களை அச்சு, ஒலி மற்றும் ஒளிப்பட அறிக்கைகளாக திரட்டுதல்
- நாளாந்தம் மும்மொழிகளில் வெளியிடப்படும் பத்திரிகை செய்திகளை பகுப்பாய்வு செய்து ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பித்தல்.

அரசாங்க தகவல் திணைக்களம்
நிறுவனக் கட்டமைப்பு



1.5. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்/அலகுகள்

1. நிர்வாகப் பிரிவு
2. கணக்குப் பிரிவு
3. அரச திரைப்படப் பிரிவு
4. தயாரிப்புப் பிரிவு
5. தொகுப்புப் பிரிவு
6. நேரலைக்கூட பிரிவு
7. ஒலி மற்றும் கேட்போர்கூடப் பிரிவு
8. வீடியோ நிழற்பட மற்றும் ஒளியலங்காரப் பிரிவு
9. டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் ஆய்வுகூடப் பிரிவு
10. திரைப்படப் பாதுகாப்புப் பிரிவு
11. நிழற்படப் பிரிவு
12. பிரச்சாரப் பிரிவு
13. இணையத்தளம் மற்றும் சமூக ஊடகப் பிரிவு
14. தெசத்திய மற்றும் வெளியீட்டுப் பிரிவு
15. மாவட்ட ஊடகப் பிரிவு
16. ஊடக அடையாள அட்டை பிரிவு
17. டிஜிட்டல் மற்றும் தகவல் தொழிநுட்ப அலகு
18. அரசாங்க வெளியீட்டுப் பணியகம், மாவட்ட வெளியீட்டு விற்பனைக் கருமபீட அலகு
19. ஊடகப் புலனாய்வு மற்றும் வெகுசன ஊடக ஆய்வுப் பிரிவு
20. வெளிநாட்டுச் செய்திகள் பிரிவு
21. பாடசாலை ஊடகக் கழகங்கள் ஊக்குவிப்புப் பிரிவு
22. நூலகப் பிரிவு
23. போக்குவரத்துப் பிரிவு
24. சுகாதாரநலம், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அலகு
25. மொழிபெயர்ப்புப் பிரிவு
26. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
27. களஞ்சியம்

1.6. திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

- மாவட்ட வெளியீட்டு விற்பனைக் கருமபீடங்கள்

  மாவட்ட ஊடகப் அலகுகள்

1.7. வெளிநாட்டு உதவிகள் கிடைக்கின்ற கருத்திட்டங்களின் தகவல்கள்

அரசாங்க தகவல் திணைக்களததின் வெளிநாட்டு உதவி கிடைக்கும் திட்டங்கள் எதுவுமில்லை.

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

❖ முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

எப்போதும் புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி அரசின் உத்தியோகபூர்வ தொடர்பாடலில் முன்னணியாகத் திகழ்வதே அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொலைநோக்காகும்.

நவீன தொழிநுட்பத்துடன் சமகாலத்தில் நாளாந்த செயற்பாடுகள் வழக்கமான பணிகளையும் தாண்டிய டிஜிற்றல் தொழிநுட்பத்துடன் அனைத்துப் பணிகளையும் டிஜிற்றல் மயமாக்கலுக்கு (Digitalization) உட்பட்டு பணிகளை மிகவும் இலகுவாக மேற்கொள்ளும் டிஜிற்றல் தளத்தில் அரசாங்க தகவல் திணைக்களம் முன்னோக்கி அடியெடுத்து வைத்துள்ளது.

அனைத்து ஊடக நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்புடன் செய்திகள்/தகவல்களின் மூலமாக அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருவதுடன், அரசாங்கத்தின் அனைத்து சமகாலத் தகவல்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தகவல்களை அரச, தனியார் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்குகின்ற அரச பொறிமுறையாக செயலாற்றுகின்றது.

அத்துடன், தற்போது டிஜிற்றல் தளத்தில் மக்களுக்கு நம்பகமான தகவல்களை தொடர்பூட்டுவதில் டிஜிட்டல் தளத்தை இவ்வருடம் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு

இயலுமை கிட்டியமை அரசாங்க தகவல் திணைக்களத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும். திணைக்களத்தின் கீழுள்ள இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளில் துரிதமாக தகவல் தொடர்பாடலை மேற்கொள்கின்ற வலையமைப்புக்களாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

❖ டிஜிற்றல்மயமாக்கலின் சிறப்பான சந்தர்ப்பங்கள்

சமூக ஊடக வலையமைப்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொய்யான தகவல்கள் காணப்படுவதால், அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களுக்கு கிடைக்கும் தகவல்களின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல் கட்டாயமானதாகும். அரசாங்க தகவல் திணைக்களம் www.dgi.gov.lk, “Department of Government Information YouTube” அலைவரிசை மற்றும் Face Book மற்றும் www.news.lk இணையத் தளம், YouTube அலைவரிசை மற்றும் Face Book பக்கம், Twitter (X Crop.) ஆகிய அனைத்து வலையமைப்புகள் ஊடாக நம்பகமான தகவல்கள் நேரடியாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

ஊடகங்களுக்கு வசதிகளை வழங்குதல்		
	நிகழ்ச்சித்திட்டங்கள்	அமுல்படுத்துதல்
01	ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக cloud தளத்தைப் பயன்படுத்தல்.	அரசாங்க தகவல் திணைக்களம், ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குகின்ற மூலாதாரங்களாக வழக்கமான முறைக்கு அப்பால், ஒளி நாடாக்கள், ஒலி நாடாக்கள், நிழற்படங்கள், செய்தி அறிக்கைகள் அனைத்தும் சகல ஊடகங்களுக்கும் ஒரே தடவையில் துரிதமாக வழங்கி வருகின்றது.
02	திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடக உள்ளடக்கங்களையும் ஊடகங்களுக்கு துரிதமாக வழங்குதல்.	அரசால் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக அனைத்து அறிவித்தல்கள் அடங்கிய ஒளி நாடாக்கள், ஒலி நாடாக்கள், நிழற்படங்கள் போன்ற அனைத்தையும் ஊடகங்களுக்கு வெளியிடுதல். முன்னர் அதற்காக முறையான பொறிமுறையொன்று இருக்காததுடன், தற்போது சிறப்பான ஒருங்கிணைப்பில் அனைத்து ஊடக நிறுவனங்களையும் பங்குபற்றச் செய்வதற்கு இயலுமை கிட்டியுள்ளது.
03	மின்னஞ்சல் System உருவாக்குதல்.	அச்சு, இலத்திரனியல், இணையத்தள ஊடகங்கள், நவீன ஊடகங்கள், வெளிநாட்டு ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் 200 வரையான மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்யப்படுகின்றது.
04	அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் ஊடக அடையாள அட்டை வழங்குதல்	கோவைகளை பராமரித்து ஊடக அடையாள அட்டை வழங்கியமைக்குப் பதிலாக தரவுத் தொகுதியைப் (Data Base) பயன்படுத்தி அவற்றை வழங்குவதற்கு இயலுமை கிட்டியுள்ளது.

மக்களுக்கு நேரடியாக தகவல்களை வழங்குதல்		
	"Department of Government Information" YouTube ஒளிபரப்பை நடாத்துதல்.	Department of Government Information You Tube மூலம் அலைவரிசை 2019 ஜனவரி மாதத்திலிருந்து இயங்காத நிலையில் 12 நேயர்களை மட்டுமே கொண்டிருந்ததுடன், அவ்வாண்டின் இறுதியில் 1000 இற்கும் மேற்பட்டோர் அதில் இணைந்து கொள்ளும் நிலைக்கு முன்னேறியது. 2023 நேயர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது. அதன்போது பல தொனிப்பொருட்களில் காணொளிகள் தயாரிக்கப்பட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது, INFO News, INFO Highlights, உள்ளார்ந்த (Inside), INFO News Parliament Highlights, Provincial Highlights, Taller, Documentary, Short video Reel போன்றவையாகும். இவையனைத்தும் திணைக்களம் பெற்றுக்கொண்ட சிறப்பான வெற்றிகளாகும். உள்நாட்டு – வெளிநாட்டு மக்கள் குறித்த YouTube அலைவரிசையுடன் இணைந்திருந்ததுடன், அதற்கு உயரிய மக்கள் பாராட்டுக்களும் கிடைத்துள்ளன.
	"Department of Government Information" Facebook பக்கத்தை இயக்குதல்.	தற்போது திணைக்களத்தின் facebook உடன் பெருமளவானோர் (Followers) இணைந்துள்ளனர். உள்ளடக்கத்தை முறையாகப் பதிவேற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து like, people reached, engage எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டியுள்ளது. சமகால மற்றும் அபிவிருத்தி பற்றிய செய்திகள் அடங்கிய காணொளிகள் (You Tube அலைவரிசையின் அனைத்து காணொளிகள்) ஆக்கபூர்வமான post மற்றும் நிழற்படப் பொழிப்புக்கள் காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்தப்படுகிறது. தற்போது ஒரு வாரத்தில் இரு இலட்சத்துக்கு கூடுதலான reached எண்ணிக்கையை பேணும் ஆற்றல் கிடைத்துள்ளது.

	www.news.lk web இணையத்தளம்	சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள் அனைத்தும் இவ் இணையதளத்தின் ஊடாக இற்றைப்படுத்தி மும்மொழிகளில் மேற்கொள்ளப்படுவதுடன், 24 மணித்தியாலமும் இற்றைப்படுத்தப்படும் அரச உத்தியோகபூர்வ இணையத் தளமாகும். இவ் இணையதளத்தின் கீழ் Face book பக்கம், You Tube அலைவரிசை, twitter (X Crop.) பக்கமும் இயங்குகிறது. அத்துடன், அமைச்சரவை ஊடக சந்திப்பு உள்ளிட்ட விசேட ஊடக சந்திப்புகள் நேரலை ஒளிபரப்பும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு சிறந்த பதிலளிப்புக்களும் கிடைத்து வருகின்றன.
	தெசத்திய சஞ்சிகை	மக்களுக்கு சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள், வெளிநாட்டு செய்திகளை உள்ளடக்கிய 44 ஆண்டுகால வரலாற்றை கொண்டுள்ள தகவல் வழங்கும் சஞ்சிகையை உரிய வகையிலும், உரிய திகதியிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது. இருப்பினும் நிலவிய நெருக்கடியான காலப்பகுதியில் பல மாதங்கள் நிறுவனத்தின் செயற்பாடுகள் சீர்குலைந்திருந்த வேளையிலும், வீட்டிலிருந்து கடமையாற்றி 2023 ஆண்டில் மிகவும் உயர்தரத்துடனும் வடிவமைப்புடனும் பன்னிரண்டு (12) தெசத்திய சஞ்சிகைகள் அச்சிடப்பட்டுள்ளன. தெசத்திய சஞ்சிகையை விநியோகம் லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, நாடு தழுவிய ரீதியில் முறையான விநியோக வலையமைப்பின் ஊடாக சஞ்சிகையை வாசகர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஊடகப் பாதுகாப்புக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்		

	டிஜிற்றல் பாதுகாப்பு முறைமையை நிறுவுதல்.	திணைக்களத்திடமுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படங்கள், காணொளிகள், நிழற்படங்கள் போன்றவற்றை டிஜிற்றல் தொழிநுட்பத்துக்கு மாற்றுகின்ற (Convert To Digital) வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 467 பழைய திரைப்படங்கள் டிஜிற்றல் தொழிநுட்பத்துக்கு convert செய்யப்பட்டு, பேணுவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், டிஜிற்றல் பாதுகாப்பு முறைமையை உருவாக்குதல் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதன்மையான பணியாக அமைவதுடன், அதன் விசேடமான வீடியோ நாடாக்கள், நிழற்படங்களைப் பாதுகாத்தல் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பணிகளாக இவ்வாண்டில் அமைந்துள்ளது.

- **ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் வசதிகளை முறையாக விரிவாக்குதல்**

ஆரோக்கியமான சமூக நல்லிருப்புக்காக நம்பகத்தன்மையுடன் உண்மைத் தகவல்களை அறிக்கையிடுவதற்காக ஊடக நிறுவனங்கள் தகவல்களைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். அரசின் அபிவிருத்தி மற்றும் சமகால தகவல்கள் முறையான பொறிமுறையின் கீழ் ஊடகங்களுக்கு தொடர்பாடல் செய்வதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய Cloud தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஊடக நிறுவனங்களுக்கு வீடியோ நாடாக்கள், நிழற்படங்கள், ஊடக அறிவித்தல்கள் போன்றவற்றை துரிதமாக வழங்குவதற்கான முறையான பொறிமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **விசேட வெற்றிகள்,**

17. திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தெசத்திய சஞ்சிகைக்கான இணையத்தளம் மற்றும் செயலி (App) ஒன்றை உருவாக்குதல்.
18. "Department of Government Information" Facebook பக்கத்தின் பயனர்கள் (Followers) 196,000 இனைக் கடந்துள்ளது.
19. மாவட்ட மட்டத்தில் 7,926 செய்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
20. தரப்பண்புடன் கூடிய வெகுசன ஊடகக் கலாச்சாரத்தை ஊக்குவித்தல் மற்றும் வெகுசன ஊடக அறிவை மேம்படுத்தல் மற்றும் பாடசாலை மட்டத்தில் ஊடக அறிவை விருத்தி செய்வதற்காக யுனெஸ்கோ இன் ஆலோசனைகளுக்கமைய அமைச்சு அரசாங்க தகவல் திணைக்களத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் முனைப்புடன் இயங்கி வருகின்ற பாடசாலைமட்ட ஊடகக் கழகங்களை அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்வதை மாவட்ட மட்டத்தில் ஆரம்பித்தல்.
21. இலங்கையின் பிரதிவிம்பத்தை சர்வதேச ரீதியாக மேம்படுத்துவதற்காக வெகுசன ஊடக அமைச்சு, அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து இலங்கைக்கான தூதரகங்கள் மற்றும் இலங்கைக்கான தூதுவர்களை உள்ளடக்கியதாக இலங்கையின் பிரதிவிம்பத்தை மேம்படுத்துகின்ற தேசிய மட்டத்திலான சேவைகள் தொடர்பாக வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கான தூதுவர்கள் 06 பேரை இணைப்புச் செய்து வெளிநாட்டு ஊடகங்களுடன் புத்திஜீவிகள் உரையாடல்கள் 06 நடாத்தப்பட்டுள்ளது.
22. வெளிநாட்டு ஊடகத் தொடர்புப் பிரிவு எமது நாட்டின் வெளிநாட்டு தூதுவராலயங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வெளிநாடுகளில் கலாச்சாரத் தொடர்பாடல்களுக்கான ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

23. வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் தொழில் ரீதியாக மேற்கொள்ளப்படும் மக்கள் தொடர்புகள் மற்றும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்து செயலாற்றுதல்.

24. **எதிர்கால இலக்குகள்**

(xv) நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் வினைத்திறனாகவும் சரியானதாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகல்களை விரிவாக்கம் செய்தல்

(xvi) அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லல்.

(xvii) திணைக்கள அலுவலர்களை அறிவாலும் அனுபவத்தாலும் மேம்படுத்தல்

(xviii) ஊடக அறிவை விருத்தி செய்தல்

(xix) பாடசாலை மட்டத்தில் ஊடகக் கல்வியை விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

(xx) ஊடகப் பகுப்பாய்வு அறிக்கைகளைப் பயன்படுத்துகின்ற அரச அலுவலர்களின் திருப்தியை அதிகரித்தல்

(xxi) பாதுகாப்பான ஊடகப் பாவனைக்கான பயனர்களின் திருப்தியை அதிகரித்தல்

தினித் சிந்தக்க கருணாரத்ன

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்/கணக்கெடுப்பு உத்தியோகத்தர்

அத்தியாயம் 03

2023 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதி செயலாற்றுகை

2023 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ - எப்

2023 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகைக் கூற்று

வரவுசெலவு திட்டம் 2023		பதிவு	உண்மை 2023 ரூ.	மீண்டும் இணைக்கப்பட்ட 2022 ரூ.	
-	**கிடைக்கப்பெற்ற வருமானங்கள்**				
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ -1
-	உள்நாட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ -1
-	சர்வதேச வர்த்தகங்கள் மீதான வரி	3	-	-	ஏசீஏ -1
-	வரி அல்லாத வருமானங்கள் மற்றும் பிற	4	-	-	ஏசீஏ -1
-	**மொத்த வருமானக் கிடைப்பனவு (அ)**		-	-	
-	வருமானம் அல்லாத கிடைப்பனவுகள்				
-	திறைசேரி கட்டுநிதி		311,417,000	314,704,000	ஏசீஏ -3
-	வைப்புகள்		4,909,612	46,988,583	ஏசீஏ -4
-	முற்பணக் கணக்கு		16,318,794	12,869,688	ஏசீஏ -5
-	பிற பிரதான பேரேட்டுக் கிடைப்பனவுகள்		-	-	
-	**மொத்த வருமானமல்லாத கிடைப்பனவுகள் (ஆ)**		**332,645,406**	**374,562,270**	
-	**மொத்த வருமான கிடைப்பனவு மற்றும் மொத்த வருமானமல்லாத கிடைப்பனவு இ = (அ) + (ஆ)**		**332,645,406**	**374,562,270**	
	திறைசேரிக்கு பணஅனுப்பல் (ஈ)		4,061	24,215	
	நிகர வருமான கிடைப்பனவு மற்றும் வருமானமல்லாத கிடைப்பனவு (ஈ) = (ஆ) – (இ)		**332,641,345**	**374,538,055**	

	கழிவிடப்பட்ட : செலவுகள்				
-	**மீண்டெழும் செலவுகள்**		-	-	
188,195,000	சம்பளம், வேதனங்கள் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள்	5	186,883,460	174,632,967	ஏசீஏ -2(ii)
124,805,000	பிற பண்டங்கள் மற்றும் சேவைகள்	6	110,2001008	94,910,133	
2,000,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,054,041	1,230,942	
-	வட்டி செலுத்தல்கள்	8	-	-	
	பிற மீண்டெழும் செலவுகள்	9	-	-	
315,000,000	**மொத்த மீண்டெழும் செலவு (உ)**		**298,137,509**	**270,774,042**	
	மூலதனச் செலவுகள்				
48,300,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்	10	13,681,599	7,875,266	ஏசீஏ -2(ii)
30,900,000	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல்	11	19,624,114	16,091,062	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	
-	நிதிச் சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-	-	
1,800,000	ஆற்றல் விருத்தி	14	596,150	1,006,500	
-	பிற மூலதனச் செலவுகள்	15	-	-	
81,000,000	**மொத்த மூலதனச் செலவு (ஊ)**		**33,901,863**	**24,972,828**	

-	வைப்பு செலுத்தல்கள்	12,452,926	47,339,975	ஏசீஏ -4
-	முற்பணம் செலுத்தல்கள்	14,878,378	14,032,526	ஏசீஏ -5
-	பிற பிரதான பேரேட்டுக் கணக்கு செலுத்தல்கள்	-	-	
-	பிரதான பேரேட்டு செலவு (எ)	**27,331,304**	**61,372,501**	
-	மொத்தச் செலவு ஊ = (இ + ஈ- உ)	**359,370,676**	**357,119,372**	
-	2023 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி எ = (இ - ஊ)	**(27,331,304)**	**17,418,683**	
		(26,729,331)	17,418,683	ஏசீஏ -7
	கட்டுநிதி இணக்கக் கூற்றுக்கமைய மீதி	-	-	ஏசீஏ -3
	டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுநிதி மீதி	**(26,729,331)**	**17,418,683**	

2 நிதி நிலை தொடர்பான கூற்று

ஏசீஏ – பி

2023 டிசம்பர் 31 திகதியில் நிதி நிலை தொடர்பான கூற்று

	பதிவு	உண்மை 2023 (ரூ.)	2022 (ரூ.)
நிதியல்லாச் சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	ஏசீஏ-6	1.942.927.346	1,834,026,037
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்கு	ஏசீஏ -5/5(ஓ)	36,840,254	38,280,670
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	ஏசீஏ -3	-	-
மொத்தச் சொத்துக்கள்		**1,979,767,600**	**1,872,306,707**
தேறிய சொத்துக்கள் / ஒப்புரவு			
திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள்		36,572,142	30,469,244
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண இருப்பு		1,942,927,346	1,834,026,037

வாடகை மற்றும் வேலை முற்பண இருப்பு	ஏசீஏ -5(பீ)	-	-
நடைமுறைச் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ -4	268,112	7,811,426
கட்டுநிதி மீதி	ஏசீஏ -3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,979,767,600**	**1,872306,707**

07 பக்கம் தொடக்கம் 49 ஆம் பக்கம் வரையான ஏசிஏ 1 தொடக்கம் ஏசிஏ 7 வரை மாதிரிப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கணக்கு தகவல்கள் மற்றும் பதிவு பக்க இலக்கம் 50 தொடக்கம் 65 வரையான கணக்குப் பதிவு விபரங்களும், இவ் இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கும் பகுதிகளாகும். இந்த நிதிக் கூற்று தயாரித்தல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இங்கு நிதிக் கூற்றுகளின் பதிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்த இறுதி கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், ஏற்புடைய கணக்கு பதிவுகள் மற்றும் ஏனைய கணக்கு தகவல்கள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டள்ளது எனவும், அவை அத்தொகைகளுடன் இணங்குகின்றன எனவும் இத்தால் உறுதி செய்கிறோம்.

நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிக்கைப்படுத்துகின்ற நிறுவனத்தில் காணப்படுவதால், நிதிக் கட்டுப்பாட்டுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை கண்காணிப்பதற்கும், அதற்கமைய, குறித்த முறைமையை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வகையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வு செய்யப்படுவதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

....	....	....
பிரதம கணக்கீட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	பிரதம கணக்காளர்
பெயர்: வீ.பி.கே.அனூஸ பெல்பிட்ட	தினித் கருரத்ன	கே.ஏ.டீ.டீ.ஏ.குமாரபேலி
பதவி: செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு	அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்	பிரதம கணக்காளர்
திகதி : 2024.02.28	2024.02.27	2024.02.27
V.P.K. Anusha Palpita Secretary Ministry of Mass Media 163, "Asidisi Medura", Kirulapona Mawatha, Polhengoda, Colombo-05.	Dinith Chintaka Karunaratne Director General of Government Information Department of Government Information Colombo 05.	K.A.D.D.A. Kumarapeli Chief Accountant Department of Government Information

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீஏ – சீ

2023 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023 (ரூ.)	**2022 (ரூ.)**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல்		-
மொத்த வரிக் கிடைப்பனவுகள்	-	-
கட்டணம், மிகைக் கட்டணம், அபராதம் மற்றும் உரிம இலாபம்	-	-
	-	-
வருமானம் அல்லாத கிடைப்பனவுகள்	-	-
பிற வருமானத் தலைப்புகளில் சேர்க்கப்பட்ட வருமானங்கள்	25,702,000	20,720,059
கட்டுநிதிக் கிடைப்பனவுகள்	311,417,000	314,704,000
முற்பண அறவிடல்	13,975,050	11,365,073
வைப்புக் கிடைப்பனவுகள்	4,909,612	46,988,583
தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல் (அ)	**356,003,662**	**393,777,714**
கழிவிடப்பட்ட – நிதிச் செலவுகள்		
தனிநபர் சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்	291,904,206	273,192,850
மானியங்கள் மற்றும் மாற்றுதல் செலவுகள்	1,054,041	1,230,942
பிற செலவுத் தலைப்புகளுக்காக செய்யப்பட்ட செலவுகள்	3,975,161	43,293,749
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுநிதி	4,061	24,215
முற்பண செலுத்தல்	13,829,160	12,910,426
வைப்பு செலுத்தல்	12,452,926	47,339,975
தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவான காசுப்பாய்ச்சல் (ஆ)	**323,219,556**	**377,992,157**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் இ = (அ) – (ஆ)	**32,784,106**	**15,785,557**
முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல்		

வட்டி	-	-
பங்குலாபம்	-	-
உரித்து நீக்கும் ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை	-	-
உப கடன்களை அறவிடுதல்	-	-
முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல் (இ)	**-**	**-**
<u>கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல் :</u>		
மூலதனச் செலவுகள்	32,784,106	15,785,557
முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஈ)	**32,784,106**	**15,785,557**
முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)	**(32,784,106)**	**(15,785,557)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)	**(0)**	**-**
<u>நிதிச் செயற்பாடுகள் மூலம் உருவான காசுப்பாய்ச்சல்</u>		
உள்நாட்டு கடன் பெறுதல்	-	-
வெளிநாட்டு கடன் பெறுதல்	-	-
கொடைகள் கிடைத்தல்	-	-
நிதிச் செயற்பாடுகள் உருவான மொத்த காசுப்பாய்ச்சல் (எ)	**-**	**-**
<u>கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல் :</u>		
உள்நாட்டு கடன் மீளச் செலுத்தல்	-	-
வெளிநாட்டு கடன் மீளச் செலுத்தல்	-	-
நிதி செயற்பாடுகளுக்கு செலவான மொத்த காசுப்பாய்ச்சல் (ஏ)	**-**	**-**
நிதி செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல் (ஏ) = (எ) – (உ)	**-**	**-**
தேறிய காசு மாற்றங்கள் (ஓ) = (ஊ) + (ஏ)	**-**	**-**
ஜனவரி 01 இல் காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31 ஆம் திகதி காசு மீதி	**-**	**-**

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

அறிக்கைப்படுத்துவதற்கான அடிப்படை

(1) அறிக்கையிடல் காலப்பகுதி

2023 ஜனவரி 01 திகதி தொடக்கம் டிசம்பர் 31 திகதி வரையான காலப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்கு உரிய அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.

(2) அளவிடல் அடிப்படை

நிதிக்கூற்று வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சில சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேறு வழிகளில் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில் கணக்கு தயாரித்தல் மேம்படுத்தப்பட்ட நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களின் பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(3) வருமானத்தை அடையாளம் காணுதல்

பரிமாற்ற மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலப்பகுதி கருத்தில் கொள்ளப்படாமல் நிதி கிடைக்கும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படுகிறது.

(4) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதல் மற்றும் அளவிடுதல்

சொத்துக்களுக்குரிய எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்துக்கு கிடைக்குமென உறுதி செய்யப்பட்டுள்ள போதும், அச்சொத்துக்களை நம்பகமாக அளவிடலாம் எனின், அச்சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்படும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் அடையாளம் காணப்படுவதுடன், கிரய மாதிரிக்கு உரியதல்லாத சந்தர்ப்பத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானம் பயன்படுத்தப்படுகிறது.

(5) ஆதனங்கள், கிரயம் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கு

இவ் ஒதுக்குக் கணக்கு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்குகளாகும்.

(6) காசு மற்றும் காசுக்குச் சமமானவை

2023 டிசம்பர் 31 திகதியில் கையிலுள்ள உள்நாட்டு பாவனை நாணய தாள்கள் மற்றும் நாணய குற்றிகளிலான காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளை கொண்டதாகும்.

ஏதேனுமொரு அறிக்கையிடுவதற்கு விசேட கொடுக்கல் வாங்கல் சந்தர்ப்பங்களில் குறித்த மாதிரிகளில் தேவையான வகையில் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

அத்துடன் ''அறிக்கைப்படுத்துவதன் அடிப்படையின்'' கீழ் குறித்த விசேட கொடுக்கல் வாங்கல்களுக்குத் தேவையான வெளிப்படுத்தல்கள் உட்சேர்க்க முடியும்.

தமது அறிக்கை நிறுவனத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மாத்திரம் அறிக்கைப்படுத்தல் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்தல்கள் செய்யப்படல் வேண்டும்.

3.5 வருமான திரட்டல் செயலாற்றுகை

ரூ. ,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		திரட்டப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீடு % ஆக
20.06.02.01	வாகனங்கள்	-	-	-	-
20.06.02.02	பிற	0	-	39.87	0
20.02.01.01	அரச கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகை	-	-	-	-
20.02.01.99	அரச சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் - வாடகை - ஏனைய வாடகைகள்	-	-	-	-
20.02.02.99	வட்டி - பிற	1,000	1,000	1521.30	152.13
20.03.01.00	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - திணைக்கள ரீதியான விற்பனை	1,200	2,000	5,666.55	566.66
20.03.02.99	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் நிர்வாக ரீதியான கட்டணங்கள் மற்றும் நானாவித செலுத்துகை	20	20	19.00	95.00
20.03.03.02	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - அபராதம் மற்றும் அரசுடமையாக்கல் - பிற	-	-	-	-
20.03.99.00	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் -	500	500	7,947.15	1589.43

	பிற கிடைப்பனவுகள்				
20.05.99.00	விலகல்களின் ஒதுக்கீடு, தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய உரிமமளித்தல்கள்	-	-	-	-

3.6 ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் உபயோகச் செயலாற்றுகை

நிதி ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு		உண்மைச் செலவு	பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	ரூ.394,000,000.00	ரூ.394,000,000.00	ரூ.298,137,509.00	75.67
மூலதன	ரூ.221,000,000.00	ரூ.221,000,000.00	ரூ.33,901,863.00	15.34

3.7 நி.ஒ 208 க்கு அமைய, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

தொ. இல	நிதி ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	நிதி ஒதுக்கீட்டு குறிக்கோள்	நிதி ஒதுக்கீடு		உண்மைச் செலவு	பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக
01.	ஊடக அமைச்சு	வீத வரி செலுத்துவதற்கு	-	560,844.00	560,844.00	100
		அமைச்சின் வரிப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 3% செலுத்துதல்	-	226,500.00	211,441.25	93
02.	அரச அச்சக திணைக்களம்	அவர்களது அச்சகப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 25% செலுத்துவதற்கு	-	1,812,000.00	1,762,010.35	97
03.	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வூதியப் பணிக்கொடை அறவீடு செய்தல்	-	1,275,865.63	1,275,865.63	100
04.	பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்	அலுவலக உதவியாளர் சேவையில் நியமனங்களைப் பெற்றுக் கொண்ட பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் கொடுப்பனவுகள்	-	165,000.00	165,000.00	100
			-	**4,404,209.63**	**3,975,161.23**	**98.97**

3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை

சொத்து குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2023 திகதிக்கு பொருள் இருப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி	31.12.2023 திகதிக்கு நிதிநிலை அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கீட்டுக்குரிய	பெறுபேறு சதவீதமாக % அறிக்கையிடல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	-	**300,848,000.00**	-	-
9152	இயந்திரோபகரணங்கள்	-	**407,168,018.18**	-	-
9153	காணி	-	**1,227,750,000.00**	-	-
9154	தொட்டுணரா சொத்துக்கள்	-	**2,328,660.00**	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொண்டு செல்கின்ற வேலைகள்	-	**4,832,667.72**	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்	-	-	-	-

தணிக்கை அறிக்கை

தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக 2

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	சொத்தொன்றுக்குரிய எதிர்கால பொருளாதார ரீதியில் நலன்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றமையை உறுதிப்படுத்துதல் மற்றும் அந்த சொத்துக்களில் வெளிப்படையாக அளவிடக்கூடிய தன்மையினை மாத்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களின் போது மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படல் வேண்டும். பிரான்ஸ் நிறுவனத்திலிருந்து கிடைத்திருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்படுகின்ற நிறஆய்வுகூட இயந்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 12 மில்லியனாக காண்பிக்கப்பட்டமையினால் அப்பெறுமதியால் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	பிரான்ஸ் அரசாங்கத்திலிருந்து கடன் உதவியின் கீழ் கிடைத்த பிரான்ஸ் பிராங்க் 9,150,000 யூரோ 1,442,601 பெறுமதியுடைய னுநடிசை வர்ண ஆய்வுகூட இயந்திரம் முன்னர் காணப்பட்ட அந்நிய செலாவணி விகிதத்தின் பிரகாரம் ரூபா 160 மில்லியன் அளவான பெறுமதியில் காணப்பட்டது. திணைக்களத்தின் கிரயத்தை இனங்காண முடியாத சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பக் கிரயத்தில் 7.5 சதவீதமான மிகவும் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ii)	2018 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 04.˙.2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு தடைவ காணி மற்றும் கட்டிடங்கள் மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 300,848,000 தொகையும், காணிகளின் பெறுமதி ரூபா 1,227,750,000 தொகையும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்து தற்போதய பெறுமதியின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த திணைக்களத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக 2023 யூன் 19 ஆந் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரப்பட்ட போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் முதலாவது சுற்றில் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்து இறுதி வரையும் இரண்டாவது சுற்றின் மதிப்பீடு கோருவதற்காக மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாதிருந்தமையும் அறிவிக்கப்பட்டுள்ளது.	இந்த திணைக்களத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக 2023 யூன் 19 ஆந் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரப்பட்ட போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் முதலாவது சுற்றில் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்து இறுதி வரையும் இரண்டாவது சுற்றின் மதிப்பீடு கோருவதற்காக மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாதிருந்தமையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 179,740 ஆன கடன் மீதி 20 வருடங்களை விஞ்சி காணப்பட்ட போதும் 2024 ஏப்ரல் 30 கணக்காய்வு திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 மார்ச் 12 ஆந் திகதி ஒரு உத்தியோகத்தரின் கடன் பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மற்றய உத்தியோகத்தர் பெற்ற கடன் தொகை தொடர்பாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்தக் கடன் தொகையைச் செலுத்துமாறு அந்த உத்தியோகத்தருக்கு கிராம உத்தியோகத்தர் மூலம் அறிவிக்குமாறும், அவரின் சொத்து அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கொரண பிரதேச செயலாளருக்கு 2024 ஏப்ரல் 05 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	ஒரு செலவின விடயம் ஒன்றில் 100 சதவீதமும், 13 செலவின விடயங்களில் 62 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது.	திணைக்களத்தின் வாகனங்களின் தேவையினை நிறைவேற்றுதல், செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கை, அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளல், உத்தியோகத்தர்கள் சம்பளம் இன்றிய விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளல், இடமாற்றத்தை பெற்றுச் சென்றமை இதற்காக தாக்கமளித்திருந்தது.	மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	04 செலவின விடயஙடகளின் நிதியேற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் 17 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது.	உத்தியோகத்தர்கள் சம்பளம் அற்ற விடுமுறை பெற்றுக் செல்லல், இடமாற்றத்தை பெற்றுச் செல்லல், செலவினக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததன் அடிப்படையில் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன னான இணங்காமைகள்	பெறுமதி ரூபா	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2017 நவம்பர் 07 ஆந் திகதிய இலக்கம் 22.ஃ99 (XXXIII) என்ற அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3.1	63,402	அலுவலகம் மற்றும் வீடுகளுக்கிடையே உத்தியோகபூர்வ குழாம் வாகன வசதிகள் உரித்தின்றி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கியதற்காக 04 மாத காலத்திற்காக 1350 Km இற்கு ரூபா	உரிய அங்கீகாரம் பணிப்பாளர் நாயகத்தால் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் நாயக அலுவலகம் முற்பகல் 8.30 மணிக்கு முன்னர் திறப்பதற்கும் மற்றும் பிற்பகல் 6.00 மணி வரை திறந்து வைப்பதற்கும் தேவை	அரச நிர்வாக சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			63,402 எரிபொருள் செலவினம் செய்யப்பட்டிருந்தது.	ஏற்பட்டமையால் ஆலோசனையின் பிரகாரம் அந்த போக்குவரத்து வசதி வழங்கப்பட்டிருந்தது.	
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01.˙.2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் ஐ ஆம் பகுதியின் 9 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமானம் 371(5) ஆம் பந்தி	490,280	செயல் நிமித்த உபகட்டுநிதி பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உபகட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமொத்தமாக ரூபா 490,280 ஆன 09 முற்பணங்கள் 20 நாட்கள் முதல் 54 நாட்கள் வரையிலான காலவீச்சில் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது.	தீர்க்கும் உறுதிச் சீட்டுக்களில் காணப்படுகின்ற சில குறைபாடுகளினால் சில முற்பணங்கள் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அரச நிதிச் சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02.˙.2002		வருடாந்த செயலாற்றல் அறிக்கை மும்மொழிகளிலும் தயாரித்து நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் கழிவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக குறித்துரைத்த ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் முடிவடைந்தவுடன் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.	அரச நிதிச் சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3 வைப்பு மீதிகள

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
கொடுப்பனவுகள் குறித்துரைத்த ரீதியில் உறுப்படுத்தப்படாத நிர்மாணப் பணிகளுக்காக அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,251,226 பெறுமதியான 02 காசோலைகள் 2020 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டு அவை ரிக்வி'ன் பத்திரம் மூலம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பொது வைப்புக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு காசோலை எழுதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பொறியியலாளர் பரிந்துரையில் அனுப்பப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு செலவினங்களை உறுதிப்படுத்தி காசோலை எழுதப்பட்டிருந்தது. எனினும் இந்த நிர்மாணங்கள் தொடர்பாக அனேகமான பிரச்சனைகள் காணப்படுவதுடன் பல்வேறு விமர்சனங்களும் எழுந்திருந்தமையால் காசோலை விநியோகப்படாமல் சமர்ப்பிக்கப்பட்ட அளவிடை அறிக்கை மீண்டும் பரீட்சிக்கப்பட்டதுடன் அதன் போது அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அளவிடைப் பத்திரங்களில் காணப்பட்ட இணக்கமின்மைகளின் காரணமாக முழுமையாக நிர்மாணிப்பதற்குரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வரை கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு காசோலைகள் தொடர்ந்தும் நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.	கொடுப்பனவுகளை குறித்துரைத்தவாறு உறுதிப்படுத்தி காசோலைகள் எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டியின் இலக்கம் 12 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய கால அட்டவணை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி∴ பெறுபேறுகள் (முரவிரவ.∴ முரவஉ_முஅந)இ உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	2023 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கால அட்டவணை, காலாண்டு ரீதியில் தயாரிக்கப்பட்டுள்ளது. சில பணிகளுக்காக தவறினால் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி ∴ விளைவுகள் காண்பிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் நடுஅரைப் பகுதியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது இந்த விடயங்களை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் விடயங்களை உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 37 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திணைக்களம தவறியிருந்தது.	உரிய உத்தியோகத்தரின் ஆலோசனை கிடைக்காமை, செலவினக் கட்டுப்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக போதியளவான வசதிகளுடன் உள்ள பதவியணியினர் காணப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.	நடைமுறை ரீதியிலான பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதில் உள்ளடக்கப்பட்ட சகல பணிகளும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

3.3 எதிர்பார்க்கப்பட்ட பூரத்தி மற்றும் பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
23 செயற்பாடுகளின் செயலாற்றல் 50 சதவீதமான குறைந்த மட்டத்தில் பௌதீக செயல் முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது. அதில் அமுல்படுத்தப்பட்ட நிதி செயல்முன்னேற்றம் 99 சதவீதம் காணப்பட்ட போதும் எந்த ஒரு பௌதீக செயல் முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை.	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மனித வளங்கள் போதியளவில் இல்லாமை	நடைமுறை ரீதியிலான பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதில் உள்ளடக்கப்பட்ட சகல பணிகளும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02.∵.2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்துக்கு கையிளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்	2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத்திட்டம் 2023 சனவரி 04 ஆந் திகதி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் தாமத வழுக்களினால் அந்த பெறுகைகள் ஆணைக்குழுவிற்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் குறித்துரைத்த படிவத்தில் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்று பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டம் 2023 யூலை 14 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடகாலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் விரிவான ரீதியில் தயாரிக்கப்படல் வேண்டும். எனினும் திணைக்களம் தயாரித்த பெறுகைத் திட்டம் 2023 ஆம் ஆண்டுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். ஆதன் காரணமாக பெறுகைத் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம். ஏதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் விரிவாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	2021 யூலை 28 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01.⁚.2021 இன் 2.3(அ) 1 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய கட்டிட நிர்மாணித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருக்கும் போது ரூபா 3,799,932 தொகையில் (வற் இன்றி) மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் போது ஆலோசனை நிறுவனம்	இந்த மலசலகூட முறைமைக்குரிய டீழுஞ தயாரிப்பதற்காக தொழில் தகைமை பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் இந்த திணைக்களத்தில் காணப்படாமையினால் முன்னாள் ஊடாக அபிவிருத்தி நிலைய கட்டிடம் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஆலோசனை சேவை வழங்கிய நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு பெறுகைகள் குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை	அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மற்றும் ஒப்பந்த நிறுவனங்களை தெரிவு செய்வதற்காக குறித்துரைத்த பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஆலோசனை நிறுவனத்தின் நிர்மாணம் தொடர்பான திட்டம், மாதிரிகள், அளவிடைப் பத்திரம் மற்றும் கொடுப்பனவு அறிக்கை தயாரித்தலில் குறைபாடு காணப்பட்டதன் காரணமாக அந்த ஆலோசனை நிறுவனத்தின் சேவையினைப் பெற்றுக்கொள்வதை கைவிடப்பட்டு மிகுதி பகுதிக்காக வேறொரு நிறுவனத்திலிருந்து ரூபா 2,084,081 தொகையில் (வற் இன்றி) ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிறுவனத்தின் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டதுடன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 1,649,401 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

எடுக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்காக ஒன்றிணைந்த குழு கூட்டம் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நடாத்தப்பட்டிருந்தது.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	தரமான நியமத்தை உடைய திரைப்படங்களை தயாரிக்கும் நோக்கில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி னுநடிசஎ நிறுவனம் மற்றும் தகவல் திணைக்களத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்ஸ் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடன் உதவியின் கீழ் பிராங் 9,150,000 (யூரோ 1,442,601) தொகைக்கு சமமான ரூபா 102.2 மில்லியன் தொகையில் 2003 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூட இயந்திர உபகரணத்தொகுதி கொண்டு வரும் போது உரிய பிரகாரம் சாத்தியவள ஆய்வு	இந்த இயந்திரத்தின் தொழில்நுட்பம் காலாவதியாகி இருந்தமையால் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை. இது தொடர்பாக அறிவித்து நிதி அமைச்சிற்கு ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் இதற்காக விசேட அறிவுடைய நபரையும் உள்ளடக்கி மூன்று பேருக்கு குறையாத குழுவொன்று நியமித்து முழுமையான விசாரணை மேற்கொண்டு னுநடிசஎ ஆய்வுகூட இயந்திர உபகரண தொகுதி தொடர்பாக எடுக்கக்கூடிய மாற்று வழிகள் என்ன என்பதனை காண்பிக்குமாறு கொம்ரோலர்	சொத்துக்கள் விளைவற்று வைக்காமல் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மேற்கொள்ளாமையின் காரணமாக 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. இந்த இயந்திர உபகரணத் தொகுதிகளை ஸ்தாபிப்பதற்காக திணைக்களத்தின் கணிசமான நிலஅளவுடன் கட்டிடம் ஒன்று பயன்படுத்தப்பட்டமையால் அந்த கட்டிடத்திலிருந்து கிடைத்த குறைப்பயன்பாடான சொத்தாக உட்பட்டிருந்தது. மேலும் இந்த ஆய்வுகூட கட்டிடத்தில் நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 85 சொத்து விடயங்கள் விளைவற்று காணப்பட்டது.	நாயகம் அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மென்மையாய்வு அறிக்கையில் பற்றாக்குறையான 12 வகைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடாக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த பற்றாக்குறை தொடர்பாக 2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.	2021 பொருள் மெய்மையாய்விற்கு உரியதாக இனங்காணப்பட்ட சகல பற்றாக்குறைகளும் மற்றும் மிகைகளும் 2023 இன் பொருள் மெய்மையாய்வின் போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.	பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டின் போது 04 வாகன விபத்துக்களில் ரூபா 223,300 நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 93,500 அறவிடப்பட்டிருக்கவில்லை.	19-7483 வாகனத்தின் நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தியடையாமையினால் அதற்குரிய நட்டத்தினை தீர்ப்பதற்கு தாமதமடைந்துள்ளது.	பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறிவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	திணைக்கள களஞ்சியத்தில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 73,167 இரண்டு வார நாளிதழ் விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் விற்பனைப் பெறுமதி ரூபா 4,099,620 ஆகும்.	வருடாந்தம் மீதியாகின்ற நாளிதழ்கள் அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்ற விழாக்கள் மற்றும் ஏனைய அரச செயற்பாடுகளின் போது விற்பனை செய்தல் பொதுவாக மேற்கொள்ளப்படுவதுடன் மக்களுக்கு இலவசமாகவும் வழங்கப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்படாதுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள நாளிதழ்கள் 12	மிகுதி இருப்புக்களை காலரீதியில் கவனத்தில் கொண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வருடங்கள் அளவிலான காலத்தில் இருந்து ஒன்று சேர்ந்திருந்த நாளிதழ்கள் ஆகும்.	

4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றை அடைந்து கொள்வதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவு தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த ஆபத்தை இனங்காணல் மற்றும் அந்த ஆபத்துக்களைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆக உரிய திட்டங்களைத்	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.	இனங்காணப்பட்ட அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) 2021 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் DMA/01-2019(1) என்ற முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் எதிர்வரும் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆபத்துக்களை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டமாக தயாரித்து அதன் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்க	அரசாங்க தகவல் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 2023 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்ததன் பின்னர் 2023 யூன் 14 ஆந் திகதி பொருத்தமான உதவி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அலகு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதனால் இறுதிக் காலாண்டிற்காக கணக்காய்வுத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும

	வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2023 நவம்பர் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	2023 ஏப்ரல் 03 ஆந் திகதிய திணைக்களத்துக்காக உள்ளகக் கணக்காய்வாரள் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் செயல்முன்னேம் 14 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	2023 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளரும் 2023 யூன் 14 ஆந் திகதி உதவி உத்தியோகத்தரும் நியமிக்கப்பட்ட போதும் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பு மற்றும் திணைக்கள முறைமைகள், உள்ளகக் கட்டுபாட்டுத் திட்டம் மற்றும் குறிக்கோள்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆய்வு செய்வதற்காக கணிசமான காலம் எடுத்தமையால் அந்தக் காலத்தில் அறிக்கை விநியோகிப்பதற்கு முடியாதிருந்தது.	உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றத்தை மேலோங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஸ்ட நிலை, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளின் வெற்றிடங்கள் 121 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலைமையின் காரணமாக ஆக்கபூர்வமான சேவை மட்டத்தைப் பேணிச் செல்வதற்காக அது தாக்கமளித்திருந்தது.	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03.˙.2022 இன் மூலம் அரச செலவினங்களை கட்டுப்படுத்துதலின் கீழ் ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையினால் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை சேர்த்தல் அறிவித்தல் வரும் வரை காலம் தாழ்த்தப்பட்டிருந்தது.	ஆக்கபூர்வமாக சேவையினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டிகள்

செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய)

விசேட சுட்டிகள்	எதிர்பார்க்கும் அடைவுகளின் வீதம் (%) ஆக உண்மை அடைவுகள்		
	100%- 90%	89%-51%	50% - 10%
விவரணத் திரைப்படத் தயாரிப்பு, நேர்காணல் நிகழ்ச்சிகள் மற்றும் குறுங்காணொளி நிகழ்ச்சிகள் தயாரிப்பு	96%	-	-
செய்திப் பதிவுகள்	-	59%	-
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல்களின் ஒளிப்பதிவு/நேரலை ஒளிபரப்பு/சைகை மொழித் தயாரிப்பு/செவிப்புல - கட்புல தயாரிப்புக்கள்		-	38%
அரச வீடியோ விளம்பரத் தயாரிப்புக்கள்	-	-	20%
GFU YouTube இணையத்தளம் மற்றும் திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம் விவரணத் திரைப்படங்களை ஒளிபரப்புதல்	96%	-	-
FGU YouTube அலைவரிசை மற்றும் Facebook பக்கத்தை மீளவும் ஆரம்பித்தல்	100%		
செய்திகள்/சம்பவ நிழற்படத் தொகுப்புக்கள் மூலம் பதிவு செய்தல்	-	-	30%
புகைப்படக் காப்பகத்திலுள்ள பழைய புகைப்படச் சுருள்களை (Scanning) செய்தல்	98%	-	-
டிஜிட்டல் நிழற்படத் தொகுப்பு மற்றும் புகைப்படக் காப்பகத்தில் பேணுதல்	-	82%	-
நிழற்படக் காப்பகத்தில் நிரந்தர காப்பமைவின் மூலம் (Back up) அனைத்து நிழற்படங்களையும் பாதுகாத்தல்	113%	-	-
டிஜிட்டல் பாதுகாப்பின் கீழ் அரச திரைப்படப் பிரிவுக்குச் சொந்தமான விவரணம் மற்றும் செய்திக் காணொளிக் காப்புக்குரிய திரைப்படங்களை டிஜிட்டல் ஊடகமாக மாற்றம் செய்வதற்கான தரநிலைப் பரிசோதனைகளை புதிப்பிக்கம் செயன்முறையை பேணிச் செல்லல்	-	70%	-

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளுக்கான, திணைக்களத்தில் பயிற்சி பெற்றுவரும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இத்துறைக்குப் பிரவேசிக்கின்ற பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் செய்முறைப் பயிற்சிகளை வழங்கல்	-	58%	-
தெசத்திய சஞ்சிகையை வெளியிடல்	100%		
தெசத்திய சஞ்சிகையை விநியோகித்தல்	-	-	44%
சட்டங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் விற்பனை	104%	-	-
தெசத்திய சஞ்சிகை செயலியை உருவாக்குதல்	-	80%	-
செய்திகள் மற்றும் ஊடக அறிவித்தல்களை www.dgi.gov.lk இல் பதிவேற்றம் செய்தல்	100%	-	-
அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகத் தொகுப்புக்கான களத்தரிசிப்புக்களை ஒழுங்குபடுத்தல்	-	55%	-
அரசின் உத்தியோகபூர்வ ஊடக அறிவித்தல்களை வெளியிடல்	100%	-	-
சர்வதேச ஊடக மாநாடுகளை ஒழுங்குபடுத்தல்	-	60%	-
வாராந்தம் ஊடகப் பகுப்பாய்வு அறிக்கைகளை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரித்தல்	-	80%	-
பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மாதாந்த விரிவுரைகளை நடாத்துதல்	-	83%	-
100 நூல் தொகுப்புக்கள் மற்றும் சுவர் செய்தி அறிவித்தல்கள் பாடசாலைகளுக்கு விநியோகித்தல்	100%	-	-
பாடசாலை மாணவர்களுக்கான சிறுகதைப் போட்டியை ஒழுங்குபடுத்தல்	-	80%	-
பாடசாலை மாணவர்களுக்கான குறுங்காணொளிப் போட்டியை நடாத்துதல்	-	80%	-
500 பாடசாலை ஆசிரியர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்குதல்	-	-	40%
தேசிய ஊடக உரையாடல் கற்கை நூலின் 02 ஆவது இதழ் வெளியிடல்	95%	-	-
பாடசாலை ஊடகக் கழகங்களுக்கான E-NewsPaper வெளியிடல்	-	80%	-
பொலிசு மற்றும் முப்படையினருக்கான குறுகியகால பாடநெறிகள் 04 இனை ஒழுங்குபடுத்தல்	100%	-	-
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகக் கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தல்	-	71.15%	-

அரசின் விசேட வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடக சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய பிரச்சார நடைவடிக்கைகள்	-	88%	-
வேறு நிறுவனங்களில் நடாத்தப்படும் ஊடகக் கலந்துரையாடல்களை ஒருங்கிணைப்புச் செய்தல்	100%	-	-
உத்தியோகபூர்வ செய்திகளை ஊடகங்களுக்கு வழங்கல்	99.5%	-	-
அரச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய ஊடகக் கண்காணிப்புக் களத்தரிசிப்புக்களை ஒழுங்குபடுத்தல்	-	-	54.54%
ஊடகப் பதிவுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்	94%	-	-
பிற செய்தி அறிவித்தல்கள்	96.5%	-	-
தேசிய வைபவங்கள், செயலமர்வுகள் மற்றும் ஊடக மாநாடுகள் உள்ளிட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்	100%	-	-
விசேட அறிக்கைகளைத் தயாரித்தல்	100%	-	-
மாவட்ட மட்டத்தில் செய்திகளை வெளியிடல்	100%	-	-
சிறப்புக் கட்டுரைகளை வெளியிடல்	-	86.4%	-
தொலைபேசி விபரத்தொகுப்பைத் தயாரித்தல்	100%	-	-
விசேட சந்தர்ப்பங்களில் விவரணத் திரைப்படங்களை மாவட்ட ஊடக அலகு மூலம் காட்சிப்படுத்தல்	-	-	50%
பிராந்திய ஊடகவியலாளர்களின் விபரத்தொகுப்பை இற்றைப்படுத்தல்	100%	-	-
பிராந்திய செய்திகளை முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்தல்	100%	-	-
ஊடக அலகின் அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்	-	-	20%
அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இற்றைப்படுத்தல் (Uploading news and current affairs)	101%	-	-
Twitter சமூக ஊடக வலைத்தளத்தை இற்றைப்படுத்தல்	101%	-	-
Visual programs in YouTube & Twitter	101%	-	-
Facebook சமூக ஊடகங்களை இற்றைப்படுத்தல்	142.5%	-	-
பொது மக்களுக்கு உத்தியோகபூர்வ தகவல்களை தொடர்பூட்டுதல்	99%	-	-
பல்வேறு விடயத்தலைப்புக்களின் கீழ் கல்விசார் விரிவுரைகளை நடாத்துதல்.	100%	-	-
ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வை ஒழுங்குபடுத்தல்.	-	80%	-
சிறப்புக் கட்டுரைகளை வரைதல்	-	77%	-
நிர்வாகப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவு அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல்.	167%	-	-

திணைக்களத்தின் மும்மொழி இணையத்தளப் பக்கத்திற்கு அபிவிருத்தி தொடர்பான செய்திகளைப் பதிவேற்றம் (Upload) செய்தல்.	101%	-	-
அரசின் விசேட கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஊடகக் கலந்துரையாடல்களை நடாத்துதல்.	-	88%	-
ஊடக வெளியீடுகள்/அறிவித்தல்களை வெளியிடல்.	97%	-	-
"விசேட அபிவிருத்தி" வேலைத்திட்டங்களுக்கான பரப்புரைகளை வழங்கல்.	100%	-	-
இலங்கையின் தனித்துவ அடையாளம் மற்றும் தேசிய தேவைகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல் (சஞ்சிகை)	-	-	35%

அத்தியாயம் 5

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடைவதற்கான செயலாற்றுகை

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடைவதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

இலக்கு / நோக்கம்	**இலக்கு (உலகளாவிய இலக்கு)**	**அடைவுச் சுட்டிகள்**	**இதுவரை அடையப் பெற்ற விகிதம்**		
			0% - 49 %	**50 % - 74 %**	**75% - 100%**
நோயற்ற வாழ்வை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்குமான நல்லாரோக்கியத்தை த ஊக்குவித்தல் **(SDG 03)**	நோயற்ற வாழ்வையும் நல்லாரோக்கியத்தையும் பேணல்.	"சரியான வகையில் உணவுகளைத் தெரிவு செய்வோம்", சமகால சுகாதாரப் பிரச்சினைகள் எனும் தலைப்பிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பங்குபற்றலுடன், DGI Talk எனும் பெயரிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டுள்ளது.	**-**	**-**	**80%**
சமத்துவமானதும் உள்வாங்கலுடன் கூடிய கல்வியைப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் தமது வாழ்நாள் முழுவதும் கல்வியைப்	பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயிலுநர் பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்கல்.	குறித்த ஆண்டில் 15 பயிலுநர் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.	**-**	**-**	**86.6 %**

பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஊக்குவித்தல் **(SDG 04)**	திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கல்.	ஒரு உத்தியோகத்தருக்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலயங்களாவது பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கல்.	**40 %**	**-**	**-**
பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்கள் சிறுவர்களை வலுவூட்டல் **(SDG 05)**	எதிர்கால ஊடகத்துறை தொழில்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக பாடசாலை ஊடகக் கழக்களில் மாணவியர்களை வலுவூட்டல்	பாடசாலை ஊடகக் கழகங்களில் மாணவியர்களை வலுவூட்டலுக்கான கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.	**-**	**-**	**80%**

5.2 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான வெற்றிகள் மற்றும் சவால்கள் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றிகள் :

1. உகந்த உணவுகளைத் தெரிவு செய்வோம், சமகால சுகாதாரப் பிரச்சினைகள் போன்ற தலைப்புக்களின் கீழ் பொதுமக்களைத் தெளிவூட்டுவதற்காக DGI Talk எனும் பெயரிலான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்துள்ளமை

2. சர்வதேச மகளிர் தினத்தையொட்டி விவரணத் திரைப்படத்தைத் தயாரித்தல்

3. “நம்பிக்கையுடன் உருவாக்குவோம்” எனும் பெயரிலான ஆவண நிகழ்ச்சிகளைத் தயாரித்திருத்தல். .

4. “கடலிலிருந்து எழும் நகரம்” எனும் பெயரிலான கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான ஆவணத் திரைப்படத்தைத் தயாரித்து தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.

5. இலங்கையைப் பற்றிய நல்லெண்ணத்தை உலகத்தாருக்கு மேம்படுத்துவதற்காக சஞ்சிகையொன்றை வெளியிடல்.

25. ஆசிரியர்களின், மாணவர்களின் ஊடக அறிவு மற்றும் ஊடக வாண்மை பற்றிய அறிவை விருத்தி செய்வதற்கான 06 மாதகால பாடநெறியை ஒழுங்குபடுத்தல்.
26. சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலமான ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு ஊடக அறிவு மற்றும் ஊடக வாண்மை அறிவை விருத்தி செய்வதற்கு மாவட்ட ஊடக செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்தல்.
27. பாடசாலை ஊடகக் கழகங்களில் மாணவியர்களை வலுவூட்டுவதற்காக கருத்திட்ட யோசனைகளை உருவாக்குதல்.

❖ **சவால்கள் :**

1. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்குப் போதியளவு நிதியொதுக்கீடுகள் கிடைக்காமை.

2. காலத்திற்குக் காலம் அரசால் பல்வேறு சுற்றறிக்கைகள் மூலம் நிதியொதுக்கீடுகள் மற்றும் செலவு மட்டுப்பாடுகளால் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தடைகள் ஏற்பட்டமை.

3. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக தனியார் ஊடக நிறுவனங்களை இணைத்துக் கொள்ளல்.

4. தொழிநுட்ப வளர்ச்சியால் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்.

5. சர்வதேச மட்டத்திலான ஊடகத் வாண்மையாளர்களை உருவாக்கல்.

6. அரச மற்றும் தனியார் துறையினருடன் தரப்பண்புடன் கூடிய ஊடகக் கலாச்சாரத்தை உருவாக்கல். .

ஆத்தியாயம் 06

மனித வளக் கட்டமைப்பு

மனித வளக் கட்டமைப்பு

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடம்	மிகை
சிரேஷ்ட	18	09	09	0
மூன்றாம் நிலை	16	01	15	0
இரண்டாம் நிலை	243	157	86	0
ஆரம்பநிலை	53	42	14	0
மொத்தம்	330	209	121	0

* 2023.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியில் உள்ளடங்காத தேசிய ஊடக நிலையத்திற்கு வருகைதந்த 40 உத்தியோகத்தர்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 70 பேரும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு கடமையில் ஈடுபடுகின்றனர்.

அங்கீகரிக்கப்படாத பணியாட்தொகுதியில் உள்ளடங்காத உத்தியோகத்தர்கள்

தேசிய ஊடக நிலையத்திற்கு வருகைதந்த உத்தியோகத்தர்கள்	40
2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள	70
மொத்தம்	110

6.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது சுருக்கமாக காட்டப்படுகிறது.

மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மனித வள பற்றாக்குறையானது திணைக்களத்தின் செயலாற்றுகையில் நேரடியாக தாக்கம் செலுத்துகிறது. குறிப்பாக தொழிநுட்ப பணிகளை மேற்கொள்கின்ற ஆளணியில் வெற்றிடம் நிலவுவதன் காரணமாக நாளாந்தக் கடமைகளை நிறைவேற்றும் போது சிரமங்கள் ஏற்படுகின்றது. அதாவது, திணைக்களப் பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள அறிவு மற்றும் திறமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுதல் அதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அத்துடன் அப்பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு வழங்குவதில் காணப்படுகின்ற தடைகள் காரணமாகவும் தற்போது பல மட்டங்களிலுள்ள பதவிகளில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகிறது.

6.3 **மனிதவள அபிவிருத்தி**

பாடநெறி/பயிற்சி செயலமர்வின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட பணிக்குழாமினர்	செயலமர்வுக் காலம்	மொத்த முதலீடு ரூ.		செயலமர்வின் தன்மை (உள்நாட்டு/வெளிநாட்டு)	அடைந்த பெறுபேறு/அறிவு
			உள்நாட்டு	வெளிநாட்டு		
Graphic Designing	01	20 வாரங்கள் வாரமொன்றுக்கு 03 மணித்தியாலயங்கள் அல்லது 06 மணித்தியாலயங்கள் 2023.03.01 இன் பின்னர்	ரூ.15,000.00		உள்நாட்டு	
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி	02	06 மாதங்கள் 2023.03.11	ரூ.49,650.00		உள்நாட்டு	
Advance Certificate in Public Procurement and asset managment	01	2023.05.17 ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு புதன்கிழமையும் 10 தினங்கள்	ரூ.22,500.00		உள்நாட்டு	
கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கல்	03	2023 யூன் மாதம் 08,15 மற்றும் 22	ரூ.45,000.00		உள்நாட்டு	
இழப்புக்கள் மற்றும் நட்டஈடுகள் நி.ஒ	04	2023 யூலை 27	ரூ.20,000.00		உள்நாட்டு	

104 இன் கீழ் விசாரணைகள்						
அரச வாகனங்களின் பராமரிப்பு	02	2023 ஆகஸ்ட் 23	ரூ.10,000.00		உள்நாட்டு	
புதிய கணக்காய்வு சட்டம் மற்றும் கணக்காய்வு பிரச்சினைகளுக் குத் தீர்வு காணல்	01	2023 செப்ரெம்பர் 18	ரூ.6,000.00		உள்நாட்டு	
ஒழுக்க நடவடிக்கை முறைகள்	02	2023 செப்ரெம்பர் 22 மற்றும் 25	ரூ.19,000.00		உள்நாட்டு	
விடுமுறைகள் மற்றும் எழுதுவினைஞர்க ளின் பணிப்பொறுப்புக் கள் மற்றும் பொறுப்புக்கள்	02	2023 செப்ரெம்பர் 25 மற்றும் 26	ரூ.19,000		உள்நாட்டு	
போக்குவத்து முகாமைத்துவம்	02	2023 ஒக்றோபர் 30	ரூ.12,000.00		உள்நாட்டு	
தனிப்பட்ட கோவைகளைப் பேணிச் செல்லல்	02	2023 நவம்பர் 07 மற்றும் 08	ரூ.19,000.00		உள்நாட்டு	
இழப்புக்கள் மற்றும் நட்டஈடு நி.ஒ 104 இன் கீழ் விசாரணைகள	02	2023 நவம்பர் 28	ரூ.10,000.00		உள்நாட்டு	

Salary Conversion	03	2023 நவம்பர் 30 மற்றும் டிசம்பர் 14	ரூ. 28,500.00		உள்நாட்டு	
How to Prepare Procurement Plan	01	2023 நவம்பர் 13 மற்றும் 14	ரூ.9,500.00		உள்நாட்டு	
அலுவலக உதவியாளர் மற்றும் சாரதிகளின் மனப்பாங்கு மற்றும் வாண்மை அறிவு விருத்திப் பயிற்சி	03	2023 டிசம்பர் 13 மற்றும் 14	ரூ.28,500.00		உள்நாட்டு	

6.4 நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக பயிற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன

அரச சேவையில் புதிதாக நியமனம் பெற்ற அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பாக வெளிவாரி நிறுவனங்கள் மூலம் உரிய பயிற்சியை வழங்குவதன் மூலம் தமது கடமைகளை சரியாக, முறையாக மற்றும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கான இயலுமை கிடைத்துள்ளது. அத்துடன் இதன் மூலம் ஆளணியினருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இப்பயிற்சிப் பாடநெறிகள் மூலம் கடமைச் சூழலில் காணப்படுகின்ற சலிப்புத்தன்மையை இல்லாது செய்து, புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அறிவை இற்றைப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்குவதன் மூலம் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் மட்டத்தக்கு கொண்டு வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

உத்தியோகத்தர்கள் பயிற்சிப் பாடநெறிகளில் பங்குபற்றுவதன் மூலம் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு இயலுமை கிட்டும்.

அத்தியாயம் 7

இணக்க அறிக்கை

இணக்க அறிக்கை

இல	ஏற்புடையதாக்க வேண்டிய தேவை	இணக்க நிலை (இணங்குகின்றது / இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அதற்கான சுருக்கமான தெளிவுபடுத்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு உத்தேசிக்கும் சரியான தீர்மான செயன்முறை
1	**பின்வரும் நிதிக்கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள்	இணங்குகின்றது	-	-
1.2	அரச அலுவலர்களின் முற்பண கணக்கு	இணங்குகின்றது	-	-
1.3	தொழில்முயற்சி மற்றும் உற்பத்தி முற்பண கணக்கு (வர்த்தக முற்பண கணக்கு)	ஏற்புடையதல்ல	-	-
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல	-	-
1.5	விசேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல	-	-
1.6	பிற	ஏற்புடையதல்ல	-	-
2	**புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல் (நி.ஒ. 445)**			
2.1	267/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	271/2019 இலக்க அ.க.சுற்றிக்கைக்கு (நிதிக் கூற்று – 2019) மூலம் தொடர்ந்தும் குறித்த பதிவேட்டை பேணுதல் அத்தியாவசியம் அற்றது என தெரிவிக்கப்பட்டள்ளது.	
2.2	தனிநபர் சம்பள பதிவேடு / தனிநபர் சம்பள அட்டை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-

2.3	கணக்காய்வு ஐயவினா பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சாராம்சம் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.7	இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.8	மொத்த இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.9	இழப்பு, நட்டப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.10	பொறுப்புகள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
2.11	உப படிவங்கள் (GA – N 20) பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-

03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை கூட்டிணைத்தல் (நி.ஒ. 135)**			
3.1	நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
3.2	நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
3.3	அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு கூடிய எண்ணிக்கையான அலுவலர்களால் அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
3.4	2014.05.11 திகதிய 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பளச் சிட்டை மென்பொருள் பெக்கேஜ் பாவனையின் போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல்.	இணங்குகின்றது	-	-
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணங்குகின்றது	-	-
4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல்	இணங்குகின்றது	-	-

4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணங்குகின்றது	-	-
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணங்குகின்றது	-	-
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்று உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
5	**கணக்காய்வு ஐயவினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதிக்கு, அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பதில்களை வழங்குவதற்குத் தாமதமாகின்றது.	எதிர்வரும் காலங்களில் குறித்த திகதியில் பதில்களை வழங்குமாறு அந்தந்தப் பிரிவுகளைத் தெளிவுபடுத்தல் மற்றும் இடைக்காலப் பதில்களை அனுப்புதல்

6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.ஒ 134 (2) DMA/1-2019 இலக்கத்துக்கு அமைய ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்.	இணங்குகின்றது	-	-
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதில் வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
6.3	2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
6.4	நிதி ஒழுங்குகள்134 (3) பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-

7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றறிக்கை 1-2019 அமைய, குறித்த ஆண்டில் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தியிருத்தியிருத்தல்	இணங்குகின்றது	நாட்டில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையால் குறித்த தினத்தில மேற்கொள்வதற்கு இயலாது போனமை	தொடர்ந்துவரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017 இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றிக்கையின் 7 ஆவது அத்தியாயத்துக்கு அமைய சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
8.2	மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்துக்கு அமைய, குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல், ஒருங்கிணைத்தலுக்காக பொருத்தமான தொடர்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, குறித்த அலுவலர் தொடர்பான தகவல்கள்	இணங்குகின்றது	-	-

	கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல்.			
8.3	05/2016 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய, பொருள் இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	பொருள் இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.	
8.4	வருடாந்த பொருள் இருப்புக் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதந்துரைகள் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	பொருள் இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.	
8.5	நி.ஒ. 772 இற்கமைய சேதமடைந்த பொருட்கள் அகற்றப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	பொருள் இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.	
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	இயங்குநிலை வாகனங்களுக்கான ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திகதியில்	இணங்குகின்றது	-	-

	கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			
9.2	வாகனம் சேதமடைந்து 06 மாத காலத்தினுள் அகற்றப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
9.3	வாகன லொக் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
9.4	ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய செயற்படுதல்.	இணங்குகின்றது	-	-
9.5	2016.12.29 திகதிய 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் தகனமடைதல் மீண்டும் சோதனை செய்தல்	இணங்குகின்றது	எரிபொருள் தகனச் சோதனைக்க நியமிக்கப்பட்டுள்ள குழு அலுவலகள் இடமாற்றம் பெற்றுள்ளமையால் மற்றும் வெளிநாடு சென்றுள்ளமையால் குழுவின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை. 2020/02/20 ஆம்	2024 ஆம் ஆண்டில் சோதனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

			திகதி மீண்டும் குழு நியமிக்கப்பட்டு சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	
9.6	குத்தகைக் காலப் பகுதியின் பின்னர் குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழுமையான உரிமை உரித்தளிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு, அவை கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகள் சீராக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதல்ல	-	-
10.3	வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குகளுக்கமைய செயலாற்றி அந்நிலுவை ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-

11	**நிதி ஒதுக்கீடுகளின் பயன்பாடு**			
11.1	வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு அவற்றின் எல்லையைக் கடந்து செல்லாத வகையில் செலவிடப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
11.2	நி.ஒ .94 (1) அமைய வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு எல்லையைக் கடக்காத வகையில் பொறுப்புகளுக்கு உடன்படுதல்.	இணங்குகின்றது	அரசாங்கத்தின் அத்தியாவசிய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடுவதால் ஒருசில செலவுத் தலைப்புக்களில் எஞ்சியுள்ள நிதியொதுக்கீட்டைக் கடந்து பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. ஆனாலும் ஒட்டுமொத்த நிதியொதுக்கீட்டு எல்லையை விஞ்சவில்லை.	வருட இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லையை மீறாமல் இருக்கும் வகையில் பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைகளுக்கு இணங்குதல்.	இணங்குகின்றது	-	-
12.2	நிலுவையாக உள்ள நிலுவைக் கடன் மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-

12.3	ஒரு ஆண்டுக்கு கூடுதலான காலமாக இருக்கும் நிலுவை கடன் மீதிகள் சீராக்கல்	இணங்கவில்லை	கடன் அறிவீடு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன	நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 க்கு அமைய செயற்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தக மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
14.2	நி.ஒ 371 இற்கமைய விடுவிக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி, குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	மீதித் தொகையை தாமதமின்றி ஈடுசெய்யப்பட்டாலும், வவுச்சர்களிலுள்ள குறைபாடுகளால் இறுதியான ஈடுசெய்தல் தாமதமாகின்றது.	எதிர்வரும் காலங்களில் அலுவலர்களைத் தெளிவுபடுத்தி சரியான வகையில் வவுச்சர்களைச் சமர்பித்தல்
14.3	நி.ஒ 371 ற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்லாத வகையில்	இணங்குகின்றது	-	-

	இடைக்கால கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருத்தல்.			
14.4	கட்டுநிதிக் கணக்கு மீதி, திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்.	இணங்குகின்றது	-	-
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு அமைய, சேகரிக்கப்பட்ட வருமானம் மீளச் செலுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
15.2	சேகரிக்கப்பட வருமானம், வைப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்படுதல்.	இணங்குகின்றது	-	-
15.3	நி.ஒ 176 ற்கு அமைய நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வரையறைக்குள் ஆளணி பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
16.2	ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல்	இணங்குகின்றது	-	-

	எழுத்து மூலம் வழங்கப்பட்டிருத்தல்.			
16.3	2017.09.20 திகதிய 04/2017 இலக்க MSD சுற்றறிக்கைக்கு அமைய, அனைத்து அறிக்கைகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
17	**பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுகள் / குறைகளைத் தெரிவிப்பதற்கான வசதி வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-

17.3	தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 08 மற்றும் 10 ஆவது பிரிவுகளுக்கமைய ஆண்டில் இரு தடவை அல்லது ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
18	**பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்**			
18.1	05/2008 மற்றும் 05/2018 (1) இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றிக்கைக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுதல்.	இணங்குகின்றது	-	-
18.2	அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்படுதல் மற்றும் அமுல்படுத்தப்படுதல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தால் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது	-	-
19	**மனித வளத் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய 02/2018 இலக்க பொது	இணங்குகின்றது	-	-

	நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 2 மாதிரியின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல்.			
19.2	மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு ஆண்டில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்துக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
19.3	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியின் அடிப்படையில் அனைத்து ஆளணியினருக்குமான வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை		எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

19.4	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கு அமைய மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேட்ட அலுவலர் நியமிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
20	**கணக்காய்வு பந்திகளுக்கு பதிலளித்தல்**			
20.1	கடந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	-	குறித்த கணக்காய்வுப் பந்தியை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ முடிவு

அரச கொள்கைகள், அரசின் அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சமகால செயற்பாடுகள் மற்றும் மக்களுக்காக அரசினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்துதல் இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்பு மற்றும் பணியாகும் என்பதுடன், மாறிவரும் உலக தொழில்நுட்ப போக்குகளுக்கு அமைவாக தகவல் தொழில்நுட்ப செயன்முறைகளை முகாமைத்துவம் செய்து, சுதந்திரமாகவும், பொறுப்புடனும் உயரிய ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் பிரதான குறிக்கோள்களாகும்.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அதாவது, ஆரோக்கியமான ஊடக சமூகத்தை உருவாக்குவதற்கு தேவையான பின்னணியை இலங்கைச் சமூகத்தில் நிறுவுவதற்கு பயன்படுத்தப்படும் கொள்கைகளை தயாரித்தல், திணைக்களத்தின் ஆளணி நிர்வாகம், அமைச்சு மற்றும் ஏனைய அரச, தனியார்துறை நிறுவனங்களுடன் கடமை ரீதியான தொடர்புகளைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளுக்காக திணைக்களம் தனது ஆளணியை நெறிப்படுத்தும் அதேவேளை, அதன் அலுவலர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் சூழமைவு உருவாக்கி வழங்கப்படுகிறது.

இவற்றில் திணைக்களம் நிறுவுவப்பட்ட அடிப்படை குறிக்கோளை அடைவதற்காக கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது. திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் குறிக்கோளை அடைவதற்காக செயற்படுகின்றது.

அரசின் அபிவிருத்தி செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகிபாகத்தை நிறைவேற்றி அந்த குறிக்கோளை அடைவதற்காக செயற்படும் அரசாங்க தகவல் திணைக்களம் அதற்காக பல்வேறு செயற்பாடுகளை தமது திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் ஆரம்பத்தில் குறித்த திட்டத்துக்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுகிறது.

பின்னர் ஆண்டு முழுவதும் குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், அதன் மூலம் அடைய முயற்சிக்கும் குறிக்கோளை அடிப்படையில் பின்வரும் வகையில் நிரற்படுத்தலாம்.

- தரநியமமான ஊடக மரபை உருவாக்குதல்.
- தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவதற்காக அரசின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் கொண்டு செல்லுதல்.
- ஊடகப் புலனாய்வுச் செயன்முறையை பலப்படுத்தல்.
- நல்லாட்சி, நல்லிணக்கம், பேண்தகு அபிவிருத்தியை நிலைநாட்டி கருத்து வெளிப்படுத்தல் மற்றும் பேச்சு சுதந்திரத்தை உறுதி செய்தல்.
- ஊடகத் துறைக்குரிய ஆய்வுகள், அபிவிருத்தி மற்றும் திட்டமிடலை உருவாக்குதல்.

மேற்குறித்த குறிக்கோளை அடைவதற்காக திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் பிரதான செயற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ஏனைய அமைச்சுக்களால் நிறைவேற்றப்படும் கருமங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சிகள் (ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடக செயலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்)
- ஊடகக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல். (அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு மற்றும் ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் பணிகள் தொடர்பான)
- ஊடக அறிவித்தல்களை வெளியிடுதல்
- ஊடகக் கண்காணிப்பு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கட்டுரைகள் வெளியீடுகளை வெளியிடுதல்.
- புதிய ஊடகங்களை பாவித்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரச்சாரத்தை வழங்குதல். (Face Book, You Tube, Twitter X etc….)
- உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்.
- நாளாந்த புலனாய்வு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் தேவைக்கு அமைய பொருத்தமான பிரிவுகளை தெளிவுபடுத்துதல்
- சமகால ரீதியில் முக்கியத்துவம் மிக்க தலைப்புகள் மற்றும் ஊடகத் துறையின் புதிய போக்குகள் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.
- விவரணத் திரைப்படங்களை தயாரித்தல் மற்றும் பிரச்சாரம் செய்தல்
- தேசிய விழாக்கள் மற்றும் பேணி பாதுகாக்க வேண்டிய நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த நிகழ்வுகளை நிழற்படம் எடுத்தல், பேணிப் பாதுகாத்தல்.

நாட்டில் அதிகரித்துவரும் உணவு மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு பொதுமக்கள் முகங்கொடுப்பதற்கு பொதுமக்களைத் தயார்படுத்துவதற்காக அரசால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பாக விவரணத் திரைப்படம்/குறுங்காணொளி மற்றும் விளம்பர இறுவெட்டுக்கள் தயாரிப்பு செய்யப்பட்டு மக்களுக்குச் சரியான அறிவை வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வைபவங்கள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டுவதற்கான விளம்பரங்கள், விவரணத் திரைப்படங்கள் மற்றும் விளம்பர இறுவெட்டுக்கள் தயாரிக்கப்பட்டது (உதாரணமாக – 76 ஆவது தேசிய சுதந்திரதினக் கொண்டாட்டம் தொடர்பான தொலைக்காட்சி விளம்பரங்கள், நூறு ஆண்டுக்கான படிமுறை எனும் ஆவணத் திரைப்படம்). இலங்கைப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள வேளையில் அயல்நாடு மற்றும் நட்பு அரசுகளிடமிருந்து கிடைத்த உதவிகள் மற்றும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான ஆவணத் திரைப்படத்தின் மூலம் மக்கள் தெளிவூட்டப்பட்டனர். நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கு சுற்றுலாத் தொழிற்றுறையை மீண்டும் மேம்படுத்துவதற்காக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு இணையாக குறுங்காணொளி நிகழ்ச்சித்திட்ட தயாரித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

IMF கடன் வசதி கிடைக்கப்பெற்றமையால் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபா பலம்பொருந்தியமை தொடர்பாக ஆவணப்படுத்தல் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் பாடசாலை மாணவர்களைத் தெளிவூட்டும் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் தலைமை அலுவலகத்தின் புதிய கேட்போர்கூடம் மற்றும் ஹோமாகம மஹிந்த ராஜபக்ஸ வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

இவ்வாறு பலதரப்பட்ட வகிபாங்குகள் மற்றும் நோக்கங்கள் மூலமாக அரசாங்க தகவல் திணைக்களம் தமது நாளாந்தக் கடமைகளில் மிகவும் வினைத்திறனுடனும் மற்றும் அரச கொள்கைகள் மற்றும் நோக்கத்தை அடைவதற்காக பொருத்தமான உந்துசக்தியாக அடுத்த ஆண்டிலும் இவ்வாறு பல்வேறு விதமான வகிபாகங்கள் மற்றும் குறிக்கோள் ஊடாக அரசாங்க தகவல் திணைக்களம் தனது நாளாந்த கடமைகளை மிகவும் வினைத்திறனாகவும், அரச கொள்கைகளை மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உந்துசக்தியாக இருந்து அடுத்த ஆண்டிலும் செயற்படும்.

******